AXIS FINANCE

# இந்திய ரிசர்வ் வங்கி - ஒருங்கிணைந்த ஓம்புட்ஸ்மேன் திட்டம் 2021

## சிறப்பு அம்சங்கள்

மக்களிடமிருந்து டிபாசிட்டுகளை ஏற்றுக்கொள்ளும் சொத்தின் அளவு >= ரூ.100 கோடி கொண்ட அனைத்து வங்கிசாரா நிதி நிறுவனங்கள் + வாடிக்கையாளர் தொடர்பு நிறுவனங்கள்(இவை நீங்கலாக: உள்கட்டமைப்பு நிதி நிறுவனங்கள், முக்கிய முதலீட்டு நிறுவனங்கள், உள்கட்டமைப்பு கடன் நிதி, மற்றும் கலைப்பு நடவடிக்கையின் கீழுள்ள என்.பி.எஃ.ப்.சி-க்கள்) ஆகியவற்றிற்கு இந்த ஓம்புட்ஸ்மேன் திட்டம் பொருந்தும்

**"சேவை குறைபாடு"** என்பது ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனம் சட்டபூர்வமாகவோ அல்லது வேறு வகையிலோ, வழங்க வேண்டிய அதன் நிதிச் சேவையில் ஏற்படும் ஏதேனும் ஒரு குறைபாடு அல்லது அது வழங்கும் சேவை வாடிக்கையாளரின் தேவையைப் பூர்த்தி செய்யவில்லை என்பதாகும். இது வாடிக்கையாளருக்கு நஷ்டம் அல்லது சேதத்தை ஏற்படுத்தலாம் அல்லது ஏற்படுத்தாமலும் போகலாம்.

**புகார் செய்வதற்கான காரணிகள்**

ஒரு ஒழுங்குப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் செயல் அல்லது புறக்கணிப்பால் பாதிப்புக்குள்ளாகும் எந்தவொரு வாடிக்கையாளரும், "சேவை குறைபாடு" என்பதன் கீழ் வரையறுக்கப்பட்டபடி, தனிப்பட்ட முறையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி மூலம் திட்டத்தின் கீழ் புகார் செய்யலாம்.

**புகாரை இத்திட்டத்தின் கீழ் பேணாமைக்கான காரணிகள்**

இத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ள முடியாத புகார்களைப் பற்றி அறிய, **ரிசர்வ் வங்கி ஒருங்கிணைந்த ஓம்புட்ஸ்மேன் திட்டம், 2021 இன் 10 ஆம் பிரிவைப்** பார்க்கவும்

**ஒரு வாடிக்கையாளர் எவ்வாறு புகார் செய்யலாம்?**

| | | | | |
|---|---|---|---|---|
| சம்பந்தப்பட்ட என்.பி.எஃ.ப்.சி-க்கு எழுதப்பூர்வ கடிதம் | ஒரு மாத முடிவில் → | என்.பி.எஃ.ப்.சி-யிடமிருந்து பதில் இல்லை என்றால் அல்லது என்.பி.எஃ.ப்.சி.யின் பதிலில் வாடிக்கையாளர் திருப்தி அடையவில்லை என்றால் | வாடிக்கையாளர் எந்த ஆணையத்தையும் அணுகவில்லை என்றால் → | ரிசர்வ் வங்கி ஓம்புட்ஸ்மேன் புகார் அளிக்கவும் (என்.பி.எஃ.ப்.சி-இன் பதிலைப் பெற்ற ஒரு வருடத்திற்குள்ளாக) |

| | |
|---|---|
| முதன்மை ஒருங்கிணைப்பு அதிகாரியின் பெயர் மற்றும் தொடர்பு விவரங்கள்<br><br>பெயர் : மிஸ்.ப்ரீத்தி சிங்<br><br>தொலைபேசி: 022 - 62260248<br><br>மின்னஞ்சல் முகவரி:<br>Principal.NodalOfficer@axisfinance.in | ஓம்புட்ஸ்மேன் திட்டத்தில் புகார் செய்வதற்கான போர்ட்டல்: **https://cms.rbi.org.in**<br><br>மையப்படுத்தப்பட்ட பெறுதல் மற்றும் செயலாக்க மையத்தின் (CRPC) தொடர்பு விபரங்கள்<br>மின்னஞ்சல் முகவரி: crpc@rbi.org.in<br><br>முகவரி: மையப்படுத்தப்பட்ட பெறுதல் மற்றும் செயலாக்க மையம் (CRPC), இந்திய ரிசர்வ் வங்கி, 4வது தளம், செக்டர் 17, சண்டிகர் - 160017<br>*Toll Free No. – 14448* |

**ஓம்புட்ஸ்மேன் எவ்வாறு ஒரு முடிவு செய்கிறது?**

- ஒம்புட்ஸ்மேன் முன்பாக நடவடிக்கைகள் பொதுவாக சுருக்கமாக இருக்கும்
- சுமூகமான முறையில் தீர்வை அடைய ஊக்குவிக்கிறது அப்படியான தீர்வை பெறமுடியவில்லை எனில், ஒரு உத்தரவு/ஆணையை வழங்குகிறது

**ஒம்புட்ஸ்மேன் வழங்கும் முடிவில் வாடிக்கையாளருக்கு திருப்தி இல்லையெனில் வாடிக்கையாளர் மேல்முறையீடு செய்ய முடியுமா?**

ஆம், ஒம்புட்ஸ்மேன் வழங்கும் முடிவு மேல்முறையீடு செய்யக்கூடியதாக இருந்தால், மேல்முறையீட்டு அதிகாரியான, ரிசர்வ் வங்கியில் இந்த திட்டத்தை நிர்வகிக்கும் பொறுப்புள்ள நிர்வாக இயக்குநரைத் தொடர்பு கொள்ளவும்

**கவனிக்கவும்:** • இது புகாரைத் தீர்ப்பதற்கான ஒரு மாற்று வழியாகும்

- எந்த கட்டத்திலும் தீர்வுக்காக வேறு ஏதேனும் நீதிமன்றம் / ஆணையம்/ அதிகாரியை அணுக வாடிக்கையாளருக்கு முழு உரிமை உள்ளது.

திட்டம் குறித்த கூடுதல் தகவலுக்கு https://www.rbi.org.in ஐப் பார்க்கவும்.